# தகவல் தெரிவிப்பாளர் கொள்கை

**1. முன்னுரை**

இட்ஸ் காஷ் கார்டு லிட் இனி ஐசிசிஎல் எனப்படும். ஐசிசிஎல் தனது வர்த்தகத்தின் அனைத்து செயல்முறைகளிலும் ஒழுக்க மற்றும் முறையான ஒருங்கமைப்பு முறை, ஒளிர்வு மறைவற்ற தன்மை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கான உறுதியை கொண்டுள்ளது. ஐசிசிஎல் எல் உயர்தரமான தொழில்தன்மை, நேர்மை, ஒழுக்கமான செயல்பாடு ஆகியவற்றை கடைபிடித்து வர்த்தகத்தின் அனைத்து அம்சங்களிலும் நியாயமான மற்றும் ஒளிர்வு மறைவற்ற விதமாக வர்த்தகத்தை செயல்படுத்தலாம் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளது. ஐசிசிஎல் தனது நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் பணியார்களுக்கான செயல்பாடுகளை கண்காணிக்கத் தேவையான கொள்கை மற்றும் தரநிர்ணயங்களை வடிவமைத்துள்ளது. தகவல் தெரிவிப்பாளரின் பங்கானது இங்கே காணப்படும் நெறிமுறைகளை அத்துமீறல் அல்லது நெறிமுறைகளுக்கு அப்பாற்பட்ட விதமாக செயல்படும் நிகழ்வுகளை சுட்டிகாட்டுவது ஆகும்

"ஐசிசிஎல்லின் ஒவ்வொரு பணியாளரும் நிகழும் அல்லது சம்பவிக்கக் கூடிய நெறிமுறைகளின் அத்துமீறல்களை அல்லது எந்த ஒரு நிகழ்வும் நிறுவனம் அல்லது நிறுவன புகழுக்கு களங்கம் விளைவிக்கலாம் என்கிற செயல்பாடுகள் நிகழ்வது உங்களுக்கு தெரியவரின் உடனே உடனடியாக மேலாண்மைக்கு தெரிவித்தல் வேண்டும் "

**2. குறிக்கோள் மற்றும் வரையறை**

இந்த கொள்கை தகவல் தெரிவிப்பாளர் ஒழுக்க நன்மதிப்புகள் துப்பறிவது, ஒருங்கிணைந்து செயலாற்றுவது போன்ற மிகவும் தீவிரமான விஷயங்களைப் பற்றி தகவல் தெரிவிப்பாளர்களுக்கு உரிய விவரம் அளிக்கும் நோக்கத்தின கொண்டது.

3. **ஊழல் தகவல் தெரிவிப்பாளர்**

வரையறைகள் மற்றும் விளக்கங்கள்

இந்த கொள்கையில் கொடுக்கப்பட்ட முக்கிய வார்த்தைகளுக்கான வரையறைகள் கீழ்வருமாறு:

அ. "தணிக்கைக் குழு" என்பது நிறுவன சட்டம் 1956 விதி 292அ வின் படியும் பங்கு மாற்ற பிரிவு 49ன் பட்டியலிடுதல் ஒப்பந்தத்தோடு பொருந்துமிடத்தில் ஒத்துச்செல்லக்கூடியதாக நிறுவன இயக்குனர் வாரியத்தால் உருவாக்கப்பட்ட தணிக்கைக்குழுவாகும்

ஆ. "நெறிமுறை" என்பது ஐசிசிஎல் நடைமுறையில் உள்ள செயல்பாட்டு விதிமுறைகள்

இ. "பணியாளர்" என்பது நிறுவனத்தின் ஒவ்வொரு பணியாளைரக் குறிக்கும் (இந்தியா அல்லது வெளிநாடு முன்னாள் பணியாளரையும் அடங்கியதாகும்)

ஈ. "துப்புதுலக்கி/கள்" என்பது பாதுகாக்கப்பட்ட தகவலின் துப்புதுலக்கும் செயல்பாட்டிற்காக தணிக்கைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட, நியமனம் செய்யப்பட்ட, ஆலோசனையிடப்பட்ட அல்லது அணுகப்பட்ட ஐசிசிஎல் ஊழியர்களோ அல்லது பிற நபர்கள் ஆவர்

உ. "பாதுகாக்கப்பட்ட தகவல்" என்பது ஒழுங்கற்ற அல்லது முறையற்ற நடவடிக்கைக்கு சான்றாக அமையக்கூடிய விதமான தகவலை வெளிப்படுத்துமாறாக அல்லது நிரூபணம் செய்யக்கூடியதான ஊழல் தகவல் தெரிவிப்பாளர் மூலமாக நன்னம்பிக்கையின் படி அளிக்கப்பட்ட தகவலாகும்

ஊ. "நபர்கள்" என்பது பாதுகாக்கப்பட்ட தகவல் மூலமாக குற்றம் சாட்டப்பட்ட அல்லது அதன் தொடர்புடையவர் அல்லது ஒரு துப்புதுலக்கின் வேளையில் குறித்த ஒருவரது எதிராக சாட்சியங்கள் சேகரிக்கப்பட்ட நபர்

எ. "ஊழல் தகவல் தெரிவிப்பாளர்" என்பது தற்போதைய அல்லது முன்னாள் பணியாளர், வாடிக்கையாளர், பொருள் தருவிப்பாளர்கள் அல்லது ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்கள் குறிப்பாக வர்த்தக அல்லது அரசு நிறுவனங்களைச் சார்ந்தோர் இவர்கள் அடங்கியோர் தவறான நடத்தைகளை அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் அல்லது சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தக்க அதிகரரத்திடம் அறிவிப்பவரைக் குறிக்கும். தவறான நடத்தை என்பது சட்ட , விதிமுறை , நெறிமுறை ஆகியவைகளின் அத்து மீறல் மற்றும் அல்லது பொது நலனிற்கு நேரடியாக குந்தகம் விளைவிக்கக்கூடிய பொய் பித்தலாட்டம், ஆரோக்கிய / பாதுகாப்பு அத்து மீறல்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தல் மற்றும் ஊழல் ஆகியவைகள் அடங்கியது.

**விளக்கம்**

இந்த நெறிமுறைகளில் வேறுவிதமாக குறிப்பிடாதவரைக்கும்

அ. ஒருமையில் குறிக்கப்படுகின்ற நபர்கள், பன்மைக்கும் மற்றும் பன்மை ஒருமைக்கும் பொருந்தும்

ஆ. ஆண்பால், பெண்பால், நடுவுநிலையாக குறிக்கப்படுகின்ற அனைத்து விஷயங்கள் அனைவருக்கும் பொருந்தும் என கொள்ளப்பட வேண்டும்.

4. **செயல்முறை**

அ. பாதுகாக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் நிறுவனத்தின் தணிக்கை குழுவின்

தலைவருக்கு அனுப்பப்படவேண்டும்.
தணிக்கைக்குழுவின் தற்போதைய தலைவரது தொடர்பு விவரங்கள் கீழ்வருமாறு:

**திரு. எம்எம் சித்தலே. தணிக்கைக்குழு தலைவர்,**
**இட்ஸ் காஷ் கார்டு லிட்,**
**6ஆம் தளம், எவெலெஸ்டு ஸ்குயர்,ஷாரதானந்த் சாலை,**
**வில்லே பார்லே கிழக்கு, மும்பை 400 057**
**மின்னஞ்சல் : mmc@mmchitale.com**

ஆ. பாதுகாக்கப்பட்ட தகவல்கள் எழுத்து வடிவத்தில் குறிப்பிடப்படுகின்ற பிரச்சனைகள் புரிந்து கொள்ளும் விதத்தில் தெளிவாக எழுதப்பட்டோ தட்டச்சு செய்யப்பட்டோ ஆங்கிலத்தில் அல்லது தகவல் தெரிவிப்பாளர் வசிப்பிடத்தின் பிராந்திய மொழியிலோ தெரிவிக்கப்படலாம். பாதுகாக்கப்பட்ட தகவல் தெரிவிப்பாளரின் அடையாளம் குறிப்பிடப்பட்டு ஒரு கடித இணைப்போடு அனுப்பப்பட வேண்டும். தணிக்கைக் குழு தலைவர் தனது முடிவின் படி அடையாளமற்ற தகவலையும் உள்ளடக்கியவாறான புகார்கள் மீதான துப்புதுலக்கினை ஆரம்பிக்கலாம்.

இ. தணிக்கைக் குழு தலைவர் இணைப்பு கடிதத்தை தன் வசம் வைத்துக் கொண்டு பாதுகாக்கப்பட்ட தகவலை தணிக்கைக்குழு உறுப்பினர்களோடு கலந்தாலோசித்து உசிதமாக இருப்பின் பாதுகாக்கப்பட்ட தகவலை துப்புதுலக்குவதற்காக துப்புதுலக்கியிடம் அனுப்புவார்

உ. பாதுகாக்கப்பட்ட தகவல்கள் உண்மையானதாக இருக்க வேண்டும் மற்றும் வதந்திகளாகவோ அல்லது அனுமானத்தின் அடிப்படையிலான முடிவாக இருத்தல் கூடாது. மேலும் விஷயம் இயன்றவரைக்கும் குறித்த தகவலாகவும் சரியான மதிப்பீடல் அடிப்படையிலானதாகவும் மற்றும் முதல்கட்ட துப்பு துலக்கு செயல்முறைக்கான அவசர நிலை மற்றும் அவசியத்தையும் கொண்டுள்ளதாகவும் அமைய வேண்டும்

5. **துப்புதுலக்குதல்**

அ. இந்த கொள்கையின் படி அறிக்கையிடப்படும் அனைத்து பாதுகாக்கபப்பட்ட தகவல்கள் துப்புதுலக்கி மூலமாக முழுவதுமாக துப்புதுலக்கப்படும்

ஆ. துப்புதுலக்கும் நபருக்கு தொடர்பான அல்லது ஈடுபடுத்தப்பட்டிருப்பின் பாதுகாக்கப்பட்ட தகவல்கள் துப்புதுலக்குவதில் அவருக்கு குந்தகம் விளைவிக்கக்கூடும் என தணிக்கை குழு கருதின் தேவைப்படின் தணிக்கைக்குழுவே துப்புதுலக்கலாம்

இ. நபரின் அடையாளம் சட்டத்தின் நியாயமான தேவைகளுக்கேற்பவும்

துப்புதுலக்குவதற்கேற்பவும் இயன்றவரைக்கும் இரகசியமாக வைக்கப்படும்

ஈ. பொதுவாக, நபர்களுக்கு துப்புதுலக்குவதற்கு முன்னர் குற்றச்சாட்டுக்களைப்பற்றி தெரிவிக்கப்படும் மேலும் துப்புதுலக்கும் சமயத்தில் அவர்களுக்கு தங்கள் சார்பாக விளக்கங்கள் அளிக்க வாய்ப்புகள் அளிக்கப்படும்.

உ. துப்புதுலக்கும் சமயத்தில், துப்புதுலக்கி அல்லது தணிக்கைக்குழுவோடு நபர்கள் முழுமையாக ஒத்துழைப்பு தரவேண்டியது அவர்களது கடமையாகும். இருப்பினும் தவறை மட்டும் ஒத்துக்கொள்வது என்று அர்த்தமாகாது.

ஊ. நபர்களுக்கு துப்புதுலக்கி, தணிக்கையாளர் குழு உறுப்பினர்கள், ஊழல் தகவல் தெரிவிப்பாளர் அல்லாத தாங்கள் விரும்பும் மற்ற நபரோடு கலந்தாலோசித்துக் கொள்ள உரிமை உண்டு. துப்புதுலக்கப்படும் சமயங்களின் எநநேரத்திலும் நபர்கள் தங்களது சுய செலவில் வழக்கறிஞரை நியமித்துக்கொள்ளலாம்

எ. நபர்கள் துப்புதுலக்குதலில் தமது குறுக்கீடு மேற்கொள்ளக்கூடாத பொறுப்பை கொண்டுள்ளார். சாட்சி ஆவணங்கள் தம் வசம் தக்கவைத்தலோ, அழித்தலோ அல்லது பாதிப்பு ஏற்படுத்தலோ மேலும் சாட்சிகளின் மீது தாக்கம் ஏற்படுத்தல், தவறாக அறிவுறுத்தல், அச்சுறுத்தல் அல்லது தொந்திரவு செய்தல் போன்றவைகளில் நபர்கள் ஈடுபடலாகாது.

ஏ. ஒரு சில காரணங்களுக்காக இயலாத பட்சங்களைத்தவிர, பொதுவாக, துப்புதுலக்கு அறிக்கைகளில் படி கண்டுபிடிக்கப்படுகின்ற விஷயங்களுக்கு நபர்கள் தங்கள் தரப்பிலுருந்து விடையளிக்க போதுமான வாய்ப்புகள் அளிக்கப்படும். நபர்களுக்கு எதிராக எந்த ஒரு குற்றச்சாட்டினையும் அந்த குற்றச்சாட்டிற்கு போதுமான சான்றுகள் இல்லாதவரை குற்றச்சாட்டை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது

ஐ. துப்புதுலக்குதலின் முடிவுகளை அறிந்து கொள்ள நபர்களுக்கு உரிமை உண்டு. குற்றச்சாட்டு நீருபிக்கப்படாத வேளையில் நபர்கள் மற்றும் நிறுவனத்தின் சிறப்பான நலனைக் கருதி முடிவுகளை பொதுப்படையாக வெளிப்படுத்துவதற்கான ஆலோசனை மேற்கொள்ளப்பட வேண்டும்

ஒ. பொதுவாக பாதுகாக்கப்பட்ட தகவல் பெறப்படுகின்ற 45 முதல் 90 நாட்களுக்குள் துப்புதுலக்கு நிறைவு செய்யப்படவேண்டும்

6. **அறிக்கையிடுதல்**

துப்புதுலக்கிகள் தங்கள் வசம் அளிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட தகவல் மீது மேற்கொள்ளப்பட்ட முதல் கட்ட அறிக்கை உள்பட முன் சமர்பிக்கப்பட்ட அறிக்கைக்கு பிறகான சமீபத்திய அறிக்கை அதன் முடிவுகள் உள்பட்டதாக அவ்வம்

வேளையில் தணிக்கைக்குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. **முடிவெடுத்தல்**

துப்புதுலக்குதல் மூலமாக, ஆரம்ப கட்ட அறிக்கை ஏதுமிருப்பின் அதனையும் உள்ளடக்கியவாறு, முறையற்ற அல்லது ஒழுங்கற்ற செயல்கள் நடைபெற்றுள்ளது என்று தணிக்கைக்குழு முடிவு செய்யின் தணிக்கைக்குழு நிறுவன நிர்வாகத்தை தணிக்கைக்குழு நிர்ணயிக்கின்ற உரிய ஒழுங்கு அல்லது சீர்திருத்த நடிவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தும்.

8. **பாதுகாக்கப்படுதல்/ தகுதிநீக்கம் பெறுதல்**

உண்மையான தகவல் தெரிவிப்பாளர்களுக்கு எந்தவிதமான நியாயமற்றவிதமாக கையாளப்படுவதிலிருந்து நிர்வாகம் பாதுகாக்கும் என உறுதிப்படுத்துகிறது. தகவல் தெரிவிப்பாளரின் தனிநபர் அடையாளத்தை சட்ட அனுமதியின் படி இயன்றவரை இரகசியமாக வைக்கப்படும். துப்புதுலக்கி தணிக்கைக்குழுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் தகவல் தெரிவிப்பாளரின் தனிநபர் அடையாளம் வெளியே தெரிவதற்கு வாய்ப்புண்டு என அவர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். குறிப்பிட்ட எந்த ஒரு துப்புதுலக்கலில் உதவி செய்யும் மற்ற பிற பணியாளருக்கும் தகவல் தெரிவிப்பாளருக்கு அளிக்கப்பட்ட அதே அளவிற்கான பாதுகாப்பு அளிக்கப்படும்.

ஆ. இருப்பினும் இந்த கொள்கையின் மூலம் அளிக்கப்படும் பாதுகாப்பு என்பது தகவல் தெரிவிப்பாளர் பொய்யான அல்லது தவறான குற்றச்சாட்டுக்களை உள்நோக்கங்களோடு சுமத்திருப்பின் அவ்வாறான செய்கைக்கு பாதுகாப்பு அளிக்காது. மேலும் இந்த கொள்கையின்படி தவறான உண்மைக்கு புறம்பான அடிப்படையற்ற தகவல்களை மூன்று முறை அளித்திருப்பின் தகவல் தெரிவிப்பாளர் மறுபடி தகவல் அளிக்க முடியாதபடி தகுதி நீக்கம் செய்யப்படுவார். இவ்வாறான தகவல் தெரிவிப்பாளர்களை பொறுத்தவரை அவர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய உரிய ஒழுங்கு நடவடிக்கைகளை தணிக்கைக்குழு தமது முடிவேற்றாற்படி நிர்ணயிக்கும்

**9. ஆவணங்கள் தக்கவைக்கப்படுதல்**

எழுத்து மூலமான அனைத்து பாதுகாக்கப்பட்ட தகவல்கள் உரிய ஆவணங்கள் மற்றும் முடிவுகளோடு குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் நிறுவனத்தில் தக்க வைக்கப்படும்

**10. திருத்தங்கள்**

இந்த கொள்கையை எந்த ஒரு முன் அறிவுப்பும் அளிக்காது மற்றும் எந்த ஒரு காரணத்தையும் முன்னிடாது இயக்குனர் குழுவின் ஒப்புதலோடு பகுதியாக அல்லது முழுமையாகவோ திருத்த அல்லது மாற்றும் உரிமையை நிறுவனம் தக்கவைத்துள்ளது.